தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

முதலாம் ஆண்டு – முதற்பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2015**

**C011** இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. பாரதியார் விரும்பிய இரு கவிஞர்கள் யாவர்?
2. வேதாந்தத்தின் உட்பொருள் யாது?
3. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டறிந்தவர் யார்?
4. பாரதியின் முப்பெரும் கோட்பாடுகள் யாவை?
5. ஆங்கிலக் கல்வியால் விளைந்த அவலம் யாது?
6. விடுதலைப் பெற்ற இந்தியாவில் பாரதியின் எதிர்பார்ப்புகள் யாவை?
7. பெண்கள் பல துன்பங்களிலிருந்துத் தம்மைப் பாதுகாக்க எது அவசியமானது என்கிறார் பாரதி?
8. வானத்தில் கொப்பளித்திருப்பது போல் காட்சியளிப்பது எது என்கிறார் பாரதி?
9. ஆதிமந்தி யார்?
10. எதிர்பாராத முத்தத்தின் தலைமை மாந்தர்கள் யாவர்?
11. ‘புண்ணியம் கோடி’ எனப் பாரதியார் எதைச் சுட்டுகின்றார்?
12. தான் பூநூல் அணியாமல் தாழ்த்தப்பட்டவர்க்குப் பூநூல் அணிவித்தவர் யார் ?
13. பிரெஞ்சுக்காரர்கள் எத்தனை ஆண்டுகள் புதுச்சேரியில் ஆட்சி செய்தனர்?
14. ‘கொலைவாளினை எடடா’ எனப் பாரதிதாசன் பாடக் காரணம் என்ன?
15. சுயமரியாதை என்றால் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. முதியோர் காதல் பற்றி பாரதிதாசனின் கருத்துக்களை எழுதுக.
2. பெண்ணுக்கு எத்தகைய நான்கு பண்புகளை விதித்திருந்தது?
3. குழந்தைமணக் கொடுமை பற்றி பாரதிதாசனின் சிந்தனைகளை எழுதுக.
4. பாரதிதாசனின் ஆசிரியப் பணியின் போது அவர் அடைந்த இரு துன்ப நிகழ்ச்சிகளை எழுதுக.
5. பொருளாதாரச் சமத்துவம் பற்றிய பாரதியாரின் சிந்தனைகளைக் கூறுக.
6. குழந்தைகளுக்குப் பாரதியார் கூறும் அறிவுரைகளைக் கூறுக.
7. தனிமனித சமத்துவம் பற்றி பாரதியாரின் கருத்துக்கள் யாவை?
8. பாரதியாரின் நாட்டுப்பற்றுக்கு இரண்டு எடுத்துக்காட்டினை எழுதுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மதங்களின் மடமை பற்றி பாரதிதாசனின் கொள்கைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் படைப்புகள் வழி புலப்படும் பெண் சார்ந்த கருத்துக்களை விரித்துரைக்க.

2. (அ) பாரதியாரின் நாட்டுப்பற்றை அவர் தம் தேசியப்பாடல்கள் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் பெண்விடுதலைக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

3. (அ) பாரதிதாசன் பார்வையில் குடும்பம் பற்றிய சிந்தனைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தனிமனித சமத்துவம் பற்றி பாரதியாரின் கருத்துக்களை மதிப்பிடுக.

✱✱✱